# வாடகைக் குடியிருப்பாளர் முறையீட்டுக் கொள்கை மற்றும் செயல்முறை: இணையம் வழியான வாடகைக் குடியிருப்பாளர் ஆலோசனைகள்

ரொறொன்ரோ சமூக வீட்டு வாரியம்

மார்ச்சு 2021

Toronto Community Housing

Toronto Community Housing

# நிகழ்ச்சி நிரல்

1. நல்வரவு மற்றும் நிலவுரிமை அங்கீகாரம்
2. அடிப்படை விதிகள்
3. மேலோட்டமான பார்வை + பின்னணி
4. பிரிந்து வேறாகும் நிகழ்வுகள்
5. இடைவேளை
6. மீண்டும் கூடி எண்ணங்களை வெளியிடுங்கள்
7. அடுத்த செயல்படிகள்

# நல்வரவு

- நிலவுரிமை  அங்கீகாரம் + அறிமுகங்கள்

# ஆரம்ப வார்த்தைகள்

ஷீலா பென்னி COO

Sheila Penny, COO

# அடிப்படை விதிகள்

- மற்றவர்கள் கூறுவதை கேளுங்கள். அவர்கள் பேசுவதற்கு இடம் கொடுங்கள்.
- கேள்விகளுக்கு மரியாதையுடன் பதில் அளியுங்கள்.
- வாடகைக் குடியிருப்பாளர்களின் மேலார்ந்த முன்னுரிமை நலன்களில் விசேட கவனம் செலுத்துங்கள்.
- வாடகைக் **குடியிருப்பாளர் பட்டயத்தின்** தத்துவங்களைக் கடைப் பிடியுங்கள்:
  - மரியாதை, சமூகக் கூட்டு முயற்சி, பொறுப்பு ஏற்றல், நேர்மை, வலுக்குறைவு கொண்ட மக்களுக்கான அணுகும் நிலை

# ஆலோசனையின் நோக்கம்

- முறையீடு மற்றும் அதற்கான தீர்வு என்பவற்றை நிர்வகிப்பது பற்றிய விடயத்தில், வாடகைக் குடியிருப்பாளர்கள் தமது கருத்துக்களை மீள்தரவாக வழங்குவதற்கு ஒரு வாய்ப்பினை கொடுக்கும் நோக்கத்துடன், இந்த ஆலோசனைச் சந்திப்பு நடைபெறுகிறது.
- இம்மீள்தரவுக் கருத்துக்கள், நடைமுறையில் உள்ள ***வாடகைக் குடியிருப்பாளர் முறையீட்டுக் கொள்கை*** மற்றும் ***வாடகைக் குடியிருப்பாளர் முறையீட்டுச் செயல்முறை*** ஆகியன தொடர்பான விடயங்களில் பிரயோகிக்கப்படும்.

# முறையீடு என்பதற்கு வரைவிலக்கணம்

பொதுவான முறையீட்டு வகைகள்




- TCHC வீட்டு வாரியம் அதன் சேவைக்கான நியமங்கள் அல்லது வாடகைக் குடியிருப்பாளர்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யாமல் உள்ள ஒரு நிலைமையில், ஒரு முறையீடு பதிவு செய்யப்படுகிறது.

- முறையீடுகள் அவை செய்யப்படும் உட்பிரதேச மட்டத்தில் தீர்க்க முடியாமல் போகுமென்றால், வாடகைக் குடியிருப்பாளர்கள் தமது முறையீட்டினை உயர் மட்டத்துக்கு எடுத்துச் சென்று தீர்வுக்கான குழு (Solution Team) வரையில் கொண்டு செல்ல முடியும்.

# TCHC வீட்டுவாரியத்தின் தீர்வுக்கான குழு

- இக்குழு, வாடகைக் குடியிருப்பாளர்களினால் முன்பு அறிவிக்கப்பட்டு தீர்வு காண முடியாமல் நிலுவையில் இருக்கும் முறையீடுகளை எடுத்து நிர்வகிக்கிறது.
- வாடகைக் குடியிருப்பாளர்களுக்கான முறையீட்டுச் செயல் முறையினை நியாயமான, செயல்திறன் மிக்க அத்துடன் ஒளிவு மறைவு இல்லாத ஒரு வழியைப் பின்பற்றி இக்குழு மேற்பார்வை செய்கிறது.
- குடியிருப்பு ஸ்தலப் பணியாளர்கள் மற்றும் பிற சேவைப் பிரிவுகள் மீதான முறையீடுகளை தீர்த்து வைப்பதற்கு, இக்குழு கூட்டு முயற்சியான ஒரு முறையினைப் பயன்படுத்துகிறது.



# முறையீடுக்கு தீர்வுகாணல்

- தீர்வு என்பதன் வரைவிலக்கணம் எமது குடியிருப்பாளர்களின் பார்வையில் அது எப்படியான ஒன்றாக இருக்க வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் அமைவது முக்கியம் ஆகும்.

*ஒரு முறையீட்டின் தீர்வு என்பது உங்கள் பார்வையில் எப்படியானதாக இருக்கவேண்டும்?*

# பிரிந்து வேறாகும் நிகழ்வுகள்

- இன்னும் சில நிமிடங்களில் நாங்கள் உங்களை "பிரிந்து வேறாகும் நிகழ்வுகள்" (breakout sessions) என்ற ஒரு நிகழ்ச்சியில் பங்குபற்றச் செய்வோம். இந்த நிகழ்ச்சியின் பொழுது நீங்கள் உங்களிடம் கொடுக்கப்படும் நிலைமை ஆய்வுகளை (case studies) மீளாய்வு செய்து கலந்துரையாடலில் எழும் கேள்விகளுக்கு பதில் அளியுங்கள்.

- CSC உதவியாளர்கள் மற்றும் குறிப்பு எழுதுபவர்கள் உங்களுடன் கூடநின்று உங்கள் உரையாடலுக்கு உதவி செய்வதுடன், உங்கள் மீள்தரவுக் கருத்துக்களையும் எடுத்துச் செல்லுவர்.

# நிலைமை ஆய்வு #1

வாடகைக் குடியிருப்பாளர் (பெயர் A) தமது வாடகை கணிக்கப்படும் விதத்தில் ஒரு பிரச்சினை இருப்பதாகக்கண்டு பிடிக்கிறார். அவர் வாடகைக் குடியிருப்பாளர் சேவைகள் ஒருங்கிணைப்பாளரிடம் (TSC) இதுபற்றிக் கூறிய பொழுது அவர் வீட்டு வாரியத்தின் இணையத் தளத்தை பார்க்கும்படி சொன்னதுடன் "அது அப்படித்தான்" என்றும் கூறுகிறார். இந்த உரையாடல் வாடகைக் குடியிருப்பாளர் A யின் மனத்தை ஆழமாகப் புண்படுத்துகிறது.

வாடகைக் குடியிருப்பாளர் A தமது TSC க்கு பல தடவைகள் தொலைபேசி அழைப்புகளை எடுத்து செய்திகளையும் விட்டிருந்தார். பதில் எதுவும் வரவில்லை.

1. நீங்கள் வாடகைக் குடியிருப்பாளர் A யின் நிலைமையில் இருந்தால் பணியாளர் பற்றிய முறையீடுகளுக்கு TCHC வீட்டுவாரியம் என்ன செய்யவேண்டும் என்று எதிர்பார்ப்பீர்கள்?

2. முறையீட்டுச் செயல்முறை தொடர்பில் TCHC வீட்டுவாரியம் என்ன செய்தால் குடியிருப்பாளர்களின் திருப்தியை அதிகரிக்க முடியும்?

# நிலைமை ஆய்வு # 2

ஒரு வாடகைக் குடியிருப்பாளர் (பெயர் A) இன்னுமொரு வாடகைக் குடியிருப்பாளர் (பெயர் B) தனது குடியிருப்பு அலகின் முன் கதவுக்கு எதிரில் குப்பை கூளங்களை வெளியே வைப்பதைக் கவனித்து விடுகிறார். இதனால் கட்டிடத்தின் கூடத்தில் (hallway) துர்நாற்றம் வீச ஆரம்பிக்கிறது. வீட்டு ஜந்துகள் மற்றும் கட்டிடத்தின் தோற்ற அழகு ஆகியன பற்றி இருவரும் கரிசனம் கொண்டு இருப்பதால், குடியிருப்பாளர் A குடியிருப்பாளர் B யிடம் நேரடியாக இதுபற்றிக் கூறியுள்ளார்.

இதற்கு மறுமொழியாக A  தனது சொந்த வேலையைப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று B கூறியதுடன் தமது குப்பையை வீட்டுவாசலுக்கு வெளியே தொடர்ந்து வைக்கிறார். குடியிருப்பாளர் A இதுபற்றி கட்டிடப் பணியாளர்களிடம் கதைத்ததுடன் சேவைபெறுநர் பராமரிப்புப் பிரிவுக்கும் தொலைபேசியில் அறிவித்தார். எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

1. நீங்கள் குடியிருப்பாளர் A யின் நிலைமையில் இருந்தால் உங்கள் கட்டிடம் /குடியிருப்புச் சமூகம் பற்றிய முறையீடுகளை தீர்க்கும் விடயத்தில் TCHC வீட்டுவாரியம் என்ன செய்யவேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள்?

2. ஒரு வாடகைக் குடியிருப்பாளர் தனது அயவலர் ஒருவர் பற்றிய முறையீடு ஒன்றை எழுப்பாமல் தவிர்ப்பதற்கு என்ன செய்யலாம்?

# நிலைமை ஆய்வு # 3

வாடகைக் குடியிருப்பாளர் (பெயர் A) குடியிருக்கும் கட்டிடத்தின் பக்கவாட்டில் உள்ள கதவு சில வேளைகளில் திறக்க முடியாதவாறு ஒட்டிக் கொள்ளுகிறது.

குடியிருப்பாளர் A யின் குடும்பத்தினர், குறிப்பிட்ட கதவு தமது குடியிருப்பு அலகுக்கு மிகக் கிட்டிய தூரத்தில் இருப்பதனாலும், மக்கள் நடமாட்டம் கூடிய நேரங்களில் அவ்வழிப் போக்குவரத்தின் அளவு குறைவாக இருப்பதனாலும் அதனை அடிக்கடி பயன்படுத்துகின்றனர்.

வாடகைக் குடியிருப்பாளர் A கதவு பற்றி சேவைபெறுநர் நிலையத்தினை தொலைபேசியில் அழைத்துச் சொன்னது மட்டுமன்றி கட்டிடக் கண்காணிப்பாளரிடமும் கூறியிருக்கிறார். கதவு திருத்தப்படும் என்று கண்காணிப்பாளரும் கூறியிருந்தார். ஆனாலும் இக்குடும்பத்தினர் ஸ்தலப் பணியாளர்களை தமது கட்டிடத்தில் பார்க்கும் போதெல்லாம் அவர்கள் வேறொரு வேலையைச் செய்து கொண்டு இருந்தனர்.

நீங்கள் வாடகைக் குடியிருப்பாளர் A யின் நிலைமையில் இருந்தால், கட்டிடத்தைத் திருத்திப் பேணுதல் சம்பந்தமான முறையீடுகளை தீர்க்கும் விடயத்தில் TCHC வீட்டுவாரியம் என்ன செய்யவேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள்?

கட்டிடத்தைத் திருத்திப் பேணும் விடயம் தொடர்பிலான பொதுவான சவால்கள் எவை?

# இடைவேளை

# மீண்டும் கூடி எண்ணங்களை வெளியிடுங்கள்

# அடுத்த செயல்படிகள்

**ஆலோசனைச் சந்திப்பின் விளைவுகள்**
*இன்று நீங்கள் எங்களுடன் பகிர்ந்து கொண்ட மீள்தரவுக் கருத்துகள் , வாடகைக் குடியிருப்பாளர் முறையீட்டுக் கொள்கை மற்றும் வாடகைக் குடியிருப்பாளர் முறையீட்டுச் செயல்முறைக்கு வழிகாட்டியாக இருந்து வரும் தத்துவங்கள் ஆகியவற்றை புதுப்பித்துக் கொள்வதற்குப் பயன்படுத்தப்படும்.*

**மீள்தரவுக் கருத்து / மதிப்பீடு படிவத்தினை நிரப்பிக் கொள்ளுங்கள்.**

# உங்களுக்கு எமது நன்றி !